www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education
Advanced Subsidiary Level and Advanced Level

**TAMIL** **8689/02**
**9689/02**

Paper 2 Reading and Writing

October/November 2004

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen on both sides of the paper.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.
Dictionaries are not permitted.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
You should keep to any word limits in the questions.
At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

*தேர்வெழுதுவோருக்கு அறிவுறுத்தல்கள்*

விடைத்தாளில் உங்களின் பெயர், தேர்வு எண், தேர்வு இட எண் ஆகியவற்றை அவற்றிற்கென்று குறிப்பிடப்பெற்றுள்ள இடங்களில் எழுதுங்கள்.

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

தரப்பெற்றுள்ள விடைத்தாளில் விடையினை எழுதுங்கள்.

நீங்கள் விடை எழுதவேண்டிய சொற்களின் அளவு ஏதாயினும் தரப்பெற்றிருப்பின் அந்த அளவுக்குள்ளாக விடையினை எழுதுதல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட விடைத்தாள்களை உபயோகிப்பின் அவற்றை ஒன்றுடன் ஒன்று இறுகக் கட்டுங்கள்.

*தேர்வெழுதுவோருக்கான தகவல்*

அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது.

ஒவ்வொரு வினாவின் அல்லது வினாப்பகுதியின் முடிவிலும் அதற்குரிய மதிப்பெண்கள் அடைப்புக்குறிக்குள் [ ] தரப்பெற்றிருக்கும்.

This document consists of **6** printed pages and **2** blank pages.

UNIVERSITY of CAMBRIDGE

www.PapaCambridge.com

## Section 1

பகுதி 1

First read the passage below and then answer the questions.

*முதலில் கீழே தரப்பெற்றுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.*

உன் தந்தை தாய் உன்னை உண்மையாக அதிகம் நேசிக்கிறார்கள். அவர்கள் அன்பு இல்லையெனில் இவ்வளவு நன்றாக வளர்ந்திருக்க முடியாது. சில சமயம் அவர்கள் உனக்கு விருப்பமானவற்றையே கூறியிருப்பார்கள். கோபம் கொண்டிருப்பார்கள். நமக்கு யார் மீது அதிகம் அன்பு உள்ளதோ அவர்களிடம் நாம் எல்லாவற்றையும் கூறுகிறோம். தந்தை தாய் தம் அன்பை பல சமயங்களில் உனக்குத் தெரியும்படி காட்டிக்கொள்வதில்லை. உன் தந்தை தாயிடம் நீயும் அதிகம் அன்பு கொள்ள வேண்டும். அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

நம் குடும்பத்தினர், சொந்த பந்தம், அயலார் மற்றும் உடன்பயிலுவோர் அனைவரிடமும் அன்பு காட்ட வேண்டும். இதனுடன் ஓய்வு நேரங்களில் படம் வரைவது, பாடுவது, புத்தகங்கள் படிப்பது, விருப்பமான பொருட்களைத் தயாரிப்பது, வீட்டை அலங்கரிப்பது, நாடகத்தில் பங்கேற்பது போன்றவற்றை முடிந்தவரை கற்றுக்கொள்ள வேண்டும். இவற்றைப் பொழுதுபோக்குகள் என்கிறோம். பொழுதுபோக்குகளை வளர்த்துக்கொள்வதால் சோர்வு நீங்குகிறது. இவற்றால் உன்மேல் உனக்கே அன்பு அதிகமாகிறது. எனக்கு எவ்வளவோ தெரியும், என்னால் எதையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை வளரும். உனக்கு மகிழ்ச்சியும் நிறைவும் கிடைக்கும்.

உடல்நலம் நம் மற்றொரு முக்கியத் தேவையாகும். இதற்காக நீ சரிவிகித மற்றும் தூய்மையான உணவை உட்கொள்ளவேண்டும், விளையாட வேண்டும், உடற்பயிற்சி செய்யவேண்டும், நோய் வராமல் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். இதேபோல், எல்லோருடனும் பழகுவதும் இன்றியமையாத ஒன்றாகும். நம் இன்பதுன்பங்களை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வது நமக்கு மிகவும் மகிழ்ச்சியினைத் தருகிறது.

உனக்குள்ள தேவைகளைப்போல் உன் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் தேவைகள் உள்ளன. தந்தை தாய் குடும்பத்தில் உள்ளோர் அனைவரின் தேவைகளையும் நிறைவு செய்ய உழைத்துப் பணம் சம்பாதிக்கிறார்கள். வீட்டில் சிற்றுண்டி, சமையல், துணிதுவைப்பது, பாத்திரம் கழுவுவது இன்னும் பல வேலைகளைச் செய்கிறார்கள். வீட்டு வேலைகளில் அவர்களுக்கு உதவுவது உன்னுடைய முக்கிய கடமையாகும். இதனால் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமகிழ்ச்சி உண்டாகிறது.

www.PapaCambridge.com

**1** For each of the definitions below, find in the text above the word or expression that has this meaning most accurately.

*கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு விளக்கத்திற்கும் மிகப் பொருத்தமான சொல் அல்லது சொற்றொடரை மேலே கொடுக்கப்பெற்றுள்ள பத்தியில் இருந்து எடுத்து எழுதுக.* [5]

எடுத்துக்காட்டு

புகைவண்டி ஓடும் பாதை – தண்டவாளம்

**(a)** ஒரே வகுப்பில் படிப்பவர்கள் [1]

**(b)** ஓய்வு நேரங்களில் செய்யப்பெறும் செயல்கள் [1]

**(c)** எல்லாச் சத்துகளும் அடங்கிய உணவு [1]

**(d)** வாழ்வில் மகிழ்ச்சியும் துயரமும் [1]

**(e)** சமையல் செய்தல், துணிதுவைத்தல், பாத்திரம் கழுவுதல் [1]

[Total: 5 marks]

**[மொத்தம் 5 மதிப்பெண்கள் ]**

**2** For each of the words/phrases in the list below, write a sentence using the word/phrase in such a way as to reveal its meaning.

*கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருளும் தெளிவாகக் கூடிய வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.*

எடுத்துக்காட்டு: அன்பு

விடை: பெற்றோர் குழந்தைகளிடம் மிகுந்த அன்பு காட்டுகிறார்கள்.

**(a)** உதவி செய்தல் [1]

**(b)** புத்தகங்கள் படிப்பது [1]

**(c)** நம்பிக்கை [1]

**(d)** இன்ப துன்பங்கள் [1]

**(e)** மகிழ்ச்சி [1]

[Total: 5 marks]

**[மொத்தம் 5 மதிப்பெண்கள் ]**

**3** Answer the following questions in Tamil. You must answer without copying comple[illegible]s word for word from the page. (the number of marks is given after each question. In [illegible] marks will be given for the general quality of language in the answer.)

*பின்வரும் வினாக்களுக்குத் தமிழில் விடை தருக. பத்தியில் இருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது விடைகளைத் தருக.*

**(a)** யாருடைய அன்பு நீ நன்றாக வளர உதவுகிறது ? [2]

**(b)** நாம் யாரிடம் எல்லாவற்றையும் கூறுகிறோம் ? [2]

**(c)** ஓய்வுநேரங்களில் நாம் எவற்றைக் கற்றுக்கொள்ளலாம் ? [4]

**(d)** உடல் நலம் காக்க நாம் என்னென்ன செய்யவேண்டும் ? [3]

**(e)** தாய்தந்தையருக்கு வீட்டு வேலைகளில் நீ எவ்வாறு உதவமுடியும் ? [4]

[Quality of Language: 5]
[Total: 20 marks]

[சிறந்த மொழித்திறன் : 5]

[மொத்தம் : 20 மதிப்பெண்கள்]

www.PapaCambridge.com

BLANK PAGE

www.PapaCambridge.com

www.PapaCambridge.com

## Section 2

பகுதி - 2

கற்றறிந்த உண்மைகளும், கேட்டறிந்த உண்மைகளும், எல்லோருடைய உள்ளத்திலும் பதிவதில்லை. உள்ளத்தில் ஆழ்ந்த உணர்வு ஏற்பட்டு பதியுமானால் அது விரைவில் செயலாக மலரும். சிந்தை, சொல், செயல் மூன்றிற்கும் இடையே திரையில்லாமல் உண்மை ஒரே நிலையாக அமையும் வாழ்க்கை உடையவர்களே உத்தமர்கள். இவர்கள் எப்போதும் தங்களுக்கென வாழாத தனித்தன்மை மிக்கவர்கள்.

தமிழ்ச்சான்றோர் திரு.வி.க.அவர்களும் இத்தகைய உத்தமர்களுள் ஒருவராவார். அவர் இந்த நெறியை உணர்ந்தார் - போற்றினார். இதுதான் உண்மையான வாழ்வின் அடிப்படை எனப் போற்றிய அவர் பிறருக்கும் எடுத்துரைத்தார். அவர் செல்வத்தைப் பொருட்படுத்தவில்லை. தாம் எழுதிய நூல்களிலிருந்து வந்த வருவாயையும் தமது என்று எண்ணியதில்லை ஏழைத் தொழிலாளருக்கு உதவுவதிலேயே மகிழ்ச்சியடைந்தார்.

ஒரு நாள் மாலை சாது அச்சுக்கூடத்திற்குச் சென்று திரு.வி.க.வைக் காண மு.வரதராசன் அவர்கள் நின்றார். சிறிது நேரத்தில் வெள்ளைக் கதர் வேட்டி உடுத்தி வெள்ளை கதர் சட்டை அணிந்து மேலே வெள்ளைக் கதர் துண்டு ஒன்றைக் கழுத்தைச் சுற்றிப் போட்டுக்கொண்டு பொலிவு பெற்ற முகத்தோடு மெல்ல நடந்து வந்தார்.

தோட்டத்திலிருந்து திரு.வி.க.வின் தமையனார் பரபரப்பாக வந்தார். வந்ததும் தம்பியாரைப்பார்த்து “என்னைத் தேடிக்கொண்டு இருக்கிறாயா? எங்கேயாவது கூட்டமா? தெரியாதே” என்றார். “பெரம்பூர் தொழிலாளர் சங்கம்” என்றார் தம்பியார். தமையனார் உடனே அறைக்குள் புகுந்தார். இரண்டு ருபாயை எடுத்து வந்து தம்பியாரிடம் கொடுத்தார். திரு.வி.க. எவ்வளவு தொகை என்று எண்ணவில்லை. பார்க்காமல் வாங்கி சட்டைப்பையில் வைத்துக்கொண்டார்.

உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களை அடக்கிக்கொண்டு மு.வ.கேட்டார், “இப்படி உங்களைப்போன்ற தலைவர்கள் பஸ்ஸுக்காகக் காத்திருந்து போவதில் காலம் எவ்வளவு வீணாகிறது?”. “என்ன செய்யலாம்? நான் ஏழை. ஏழைகளுக்காகத் தொண்டு செய்பவன். ஏழ்மையை ஏற்றுக்கொள்பவன். எனக்கு இதுவே போதும். இந்த நிலையிலேயே எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்யவேண்டும் என்பதுதான் என் ஆசை” என்றார் அமைதியாக திரு.வி.க.

www.PapaCambridge.com

**4** Answer the following questions in Tamil. You must answer without copying complete sentences word for word from the given passage.

பின்வரும் வினாக்களுக்குத் தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து வாக்கியங்களையோ சொற்களையோ அப்படியே எடுத்தெழுதாது விடைகளை எழுதுக.

**(a)** உத்தமர் என்பவர் யார் ? [2]

**(b)** திரு.வி.க. உத்தமர்களுள் ஒருவர். எவ்வாறு? [4]

**(c)** திரு.வி.க. வின் தோற்றம் எவ்வாறு இருந்தது? [4]

**(d)** திரு.வி.க.வின் தமையனார் என்ன கேட்டார் ? [2]

**(e)** மு.வரதராசன் திரு.வி.க.விடம் கேட்டது என்ன? [3]

[Quality of Language: 5]
[Total: 20 marks]
[சிறந்த மொழித்திறன் : 5]

[மொத்தம் : 20 மதிப்பெண்கள்]

**5** Answer the following questions for a maximum of 140 words in **Tamil**.

பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மேற்படாமல் தமிழில் விடை தருக.

**(a)** தன்னலமற்றவரே உத்தமராவார் - இதற்கு இரு எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக. [10]

**(b)** தன்னலமின்மை பற்றிய உமது கருத்துகளைத் தருக. [5]

[Quality of Language: 5]
[Total: 20 marks]
[சிறந்த மொழித்திறன் : 5]

[மொத்தம் : 20 மதிப்பெண்கள்]

**BLANK PAGE**

www.PapaCambridge.com

*Copyright Acknowledgements:*

Every reasonable effort has been made to trace all copyright holders where the publishers (i.e UCLES) are aware that third-party material has been reproduced. The publishers would be pleased to hear from anyone whose rights we have unwittingly infringed.

University of Cambridge International Examinations is part of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.